මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/01/01/04-2022
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2022.04.26

**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 03/2022**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்/ மாவட்டச் செயலாளர்கள்
கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரசாங்க செலவினத்தினை முகாமைசெய்தல்**

இலங்கையின் பொருளாதாரம் மிகவும் நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளது. அதனுடன், பொது நிதியை மிகவும் பொறுப்பான மற்றும் சிக்கனமான முறையில் பயன்படுத்தும் அதே வேளையில், பொதுமக்களுக்கு வினைத்திறனான மற்றும் உற்பத்திச் சேவையை வழங்குவதற்கான தேவை முன்னெப்போதையும் விட முதன்மையான முன்னுரிமையாக மாறியுள்ளது. இந்த சவால்மிக்க சூழ்நிலையைக் கட்டுப்படுத்த அரசின் வருமானத்தினை அதிகரிப்பது மிக முக்கியமான தேவையாகும். எவ்வாறாயினும், அரசாங்க வருமானத்தினை அதிகரிக்க எடுக்கும் கால நேரத்தைக் கருத்திற் கொண்டு, பொதுச் செலவினங்கள் மிகவும் இறுக்கமானதாக இருக்க வேண்டும், இதனை மிகவும் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே கிடைக்கும்படிச் செய்தல்வேண்டும்.

02. இதற்கமைய, பல்வேறு சுற்றறிக்கைகளின் மூலம் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட, எரிபொருள் மற்றும் தகவல் தொடர்பாடல் கொடுப்பனவுக் கட்டுப்படுத்தல், நீர் மற்றும் மின்சார செலவினங்களை வரையறுத்தல், கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் வாடகைக்குப் பெறுவதனை இடைநிறுத்தல், வெளிநாட்டு கல்விப் பயணங்கள் மற்றும் உள்ளூர் நிதி மூலம் நடத்தப்படும் பயிற்சிகளை நிறுத்துதல், அமைச்சரவை அங்கீகாரமின்றி அமைச்சு மற்றும் நிறுவன மட்டத்தில் வழங்கப்படும் பல்வேறு கொடுப்பனவுகளை இடைநிறுத்துதல் அத்துடன் பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் / உதவு தொகைகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஏதேனும் புதிய ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாமை என்பவற்றினை அனைத்து அரசாங்க நிறுவனங்களும் தொடர்ந்து கடுமையாகப் பின்பற்றுதல் வேண்டும்.

03. மேலும், செலவினங்களை மேற்கொள்கின்ற போதும், உள்ளூர் நிதியைப் பயன்படுத்துகின்ற கருத்திட்டங்களைச் செயற்படுத்தும் போதும் பின்வரும் செலவுகளைக் கட்டுப்படுத்தும் முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

i. கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல், சேவைகள் அல்லது பொருட்கள் கொள்வனவு தொடங்கப்பட்ட / தொடங்க உள்ள அனைத்து கருத்திட்டங்களையும் (வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் உட்பட) தற்காலிகமாக நிறுத்திவைத்தல்.

ii. ஒப்பந்ததாரர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டாலும், பணிகள் ஆரம்பிக்கப்படாத கருத்திட்டங்கள், சேவைகள் அல்லது பொருட்கள் கொள்வனவினை நிறுத்துவது பற்றி ஆராய்ந்து அதன்படி செயற்படுதல்.

iii. கருத்திட்டங்கள், பணிகள் மற்றும் பொருட்களின் பெறுகை தொடங்கப்பட்ட போதிலும், மூலப்பொருட்களின் பற்றாக்குறை அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் நிறுத்தப்பட்ட அல்லது குறைந்த முன்னேற்றத்தைக் கொண்ட பணிகள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்மாணப் பணிகள் / செயற்பாடுகளை அல்லது கருத்திட்டங்களின் நடவடிக்கைகள், பணிகள் மற்றும் பொருட்களின் பெறுகை ஆகியவற்றை ஒத்திவைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இது சம்பந்தமாக, உரிய ஒப்பந்ததாரர்களுடன் இணக்கம் எட்டப்பட வேண்டும் என்பதுடன் ஒப்பந்தக்காரர்களுக்கு எந்த பாதகமும் ஏற்படாத வகையிலான பொறிமுறையின் பாற் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

பாதியில் முடிக்கப்பட்ட உட்கட்டமைப்பு கருத்திட்டங்களை இடைநிறுத்தும் போது, அத்தகைய உட்கட்டமைப்பைப் பயன்படுத்தும் மக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கும் வகையிலும் அவற்றின் நீண்டகால இருப்பை உறுதி செய்யும் வகையிலும், தேவையான பகுதியினை நிர்மானித்தல் வேண்டும்.

iv. வரவு செலவுத்திட்ட முன்மொழிவாக அமுல்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேசிய திட்டமிடற் திணைக்களத்தின் பரிந்துரைகள் பெறப்பட்ட போதிலும் இதுவரையில் ஆரம்பிக்கப்படாத அல்லது அர்ப்பணிப்பு செய்யப்படாத கருத்திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்துதல்.

v. ஆரம்பிப்பதற்கு குறிப்பிட்ட அங்கீகாரம் பெறப்படாத கருத்திட்டங்கள் தொடர்பில் காணிகள் அல்லது பிற சொத்துக்களை கையகப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடாது.

vi. மூலதன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சலுகையல்லாத வங்கிக் கடன்கள் / உதவியற்ற நிதி மானியங்கள் என்பவற்றின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பல்வேறு பண்டங்கள், பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விநியோகத்தினை மீளாய்வு செய்து அவற்றை இடைநிறுத்துதல்.

vii. பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், இதுவரை நியமனங்கள் மேற்கொள்ளப்படாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்பை ஒத்திவைத்தல்.

viii. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள், நலன்புரித்திட்டங்கள், அபிவிருத்தி உதவிகள் அல்லது மானியங்கள் வழங்கப்படுவதை நிறுத்துதல்.

ix. அமைச்சுகளின் செயலாளர்கள் / திணைக்களத் தலைவர்களின் அங்கீகாரத்தின் கீழ் செய்யப்படும் சம்பளமற்ற கொடுப்பனவுகள், சிட்டை திருப்பிச் செலுத்தல்கள் என்பவற்றை மீளாய்வுசெய்து பொதுவாக அனைத்து அலுவலர் குழுக்களுக்கும் வழங்குவதற்குப் பதிலாக உண்மையிலேயே பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்காக மாத்திரம் வரையறுத்தல்.

x. அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்குகளின் கீழ் பதவி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதியை ஆண்டு இறுதி வரை நிறுத்தி வைத்தல்.

xi. அரச நிறுவனங்களிடையே தகவல் தொடர்பு நோக்கத்திற்காக முடிந்தவரை மின்னணு முறைகளைப் பயன்படுத்தி காகிதாதிகள் பயன்பாடு மற்றும் அச்சிடுவதற்கான செலவைக் குறைத்தல்.

xii. நலன்புரித் திட்டங்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு மாத்திரம் அல்லது உரிய ஆவணங்களை மதிப்பாய்வுக்குட்படுத்தி கட்டாயம் உதவி வழங்கப்பட வேண்டிய குறைந்த வருமானம் பெறுநர்களுக்கு மாத்திரம் நன்மைகள் வழங்குவதனை வரையறுத்தல்.

xiii. கடமைகளில் உண்மையான ஈடுபாடு / வருகையை உறுதி செய்யாமல் செய்யப்பட்ட அனைத்து மேலதிக நேர கொடுப்பனவுகளை இடைநிறுத்துதல் மற்றும் பல்வேறு வழிகளில் பெறப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவுகளின் மொத்த தொகை சம்பளத்தை விட அதிகமாக இருக்கக்கூடாது என்பதற்காக பொறிமுறையொன்றினைத் தயார் செய்தல்.

xiv. மேலதிக நேரம் அல்லது இதர கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டினை விஞ்சிய தொகையினை செலவிட அதிகாரம் இல்லாததால், எதிர்காலத்தில் நிதி ஏற்பாடுகளைப் பெறுவதற்கான எதிர்பார்ப்புடன் எந்த கொடுப்பனவுகளையும் செலுத்தக்கூடாது.

xv. உத்தியோகபூர்வ வாகனப் பயன்பாட்டில் அங்கீகரிக்கப்பட்ட உரித்தினை விஞ்சியதாக வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாக அறிக்கையிடப்படும் சந்தர்ப்பத்தில், உத்தியோகபூர்வ உரித்துக்கமைவாக குறிப்பீடுசெய்யப்பட்ட எரிபொருள் வரையறைக்குள் ஒரு வாகனம் மாத்திரம் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

xvi. அரச நிறுவனங்களால் நடத்தப்படும் நிகழ்வுகள், திறப்பு விழாக்கள், கருத்தரங்குகள் உட்பட அவசியமற்றதும் முன்னுரிமையற்றதுமான செலவுகள் என கருதப்படும் அனைத்து செலவுகளையும் இடைநிறுத்துவதுடன் அதற்காகப் பொது நிதியைப் பயன்படுத்தாதிருத்தலும் வேண்டும்.

04. தற்போதைய சவால்மிகுந்த சூழ்நிலை தீர்க்கப்படும் வரை அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் மேற்கண்ட விதிகளைப் பின்பற்றுவதை அனைத்து கணக்கீட்டு மற்றும் பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் உறுதிப்படுத்துவதுடன், எதிர்காலத்தில் தீர்மானமொன்று எடுக்கப்படும் வரை குறித்த விதிகளின்படி தொடர்ந்து செயல்படுதல்வேண்டும்.

05. இந்த இக்கட்டான காலகட்டத்தில் பொதுமக்களின் நலன் தொடர்பில் அரச ஊழியர்களாகிய எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை முறையாக நிறைவேற்றும் அதே வேளையில், பொருளாதார வளர்ச்சியின் மூலம் பொது மக்களின் பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தரமான வாழ்க்கைத் தரத்தை வலுப்படுத்துவதற்கு சிறந்த, நிலைபேறான, பொது நிதி முகாமைத்துவத்தினை நிறுவுவதற்கான உங்களது ஒத்துழைப்பு மிகவும் பாராட்டத்தக்கது.

**ஒப்பம்/ கே.எம்.எம். சிரிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், நிதி ஆணைக்குழு